**I.A.No.210/2017 in OS No. 3/2017**
**Dated 13.07.2022**

**உத்தரவு திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டது.**

மனு மற்றும் மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள பிரமாண வாக்குமூலத்தையும், வழக்கு ஆவணங்களையும், 1–ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்மனுவுரையையும் கவனமாக பரிசீலிக்கப்பட்டுள்ளது.

மனுதாரருக்கு மனு சொத்தானது பிதுரார்ஜித வகையிலும் பாகசாசன ஆவண எண்.5945/2015–ன்படிக்கு பாத்தியப்பட்டு தன்னுடைய முன்னோர்களும் தானும் சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக ஆண்டு அனுபவித்து வரும் பாதை கிழக்கிழிருந்து மேற்காக சுமார் தென்வடல் 24 அடியும் கிழமேல் 700 அடி நீளமுமாக சென்று தென்புறமாக திரும்பி கிழமேல் 24 அடி அகலமும் தென்வடல் 150 அடி நீளமும் கொண்ட மனு சொத்தை சென்றடைய உள்ள தட பாத்திய வண்டிப்பாதையை எதிர்மனுதாரர்கள் அனுபவிக்க விடாமல் தடுத்ததாக மனுதாரர் தனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளார். எதிர்மனுதாரர் தனது எதிர்மனுவுரையில் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட க.ச. எண்கள்.242/2, 242/3, 242/4, 242/5 மற்றும் 242/6, 243/2, 243/3 ஆகிய காலைகளில் எவ்வித தடமும் இல்லை மனுதாரருக்கு இல்லை என்றும் மனுதாரரின் சொத்திற்கு செல்ல மாமூல் வழி தடம் க.ச.242/1, 243/5–ல் இருந்து வருகிறது என்றும் ஏற்கனவே வழி தடம் உள்ள பூமிக்கு வேறு வழி தடம் வேண்டி தாவா தாக்கல் செய்திருப்பது ஏற்க கூடிய வகையில் இல்லை என்றும் முன்வைத்துள்ள வாத பிரதிவாதங்களை கருத்தில் கொண்டு மனுவினை பரிசீலிக்கையில் இரு தரப்பினருக்கும் இடையே வண்டிப் பாதையை பொருத்து பிரச்சனை இருப்பது தெளிவாகிறது.

எனவே, மனு சொத்தின் அமைப்பு குறித்த இயல்பு நிலையை அறியவும், மனுதாரர் சொல்வது போல மனு சொத்திற்கு எதிர்மனுதாரர் பூமிமேல் வழி தடம் உள்ளதா? அல்லது எதிர்மனுதாரர் சொல்வதுபோல மனு சொத்திற்கு செல்ல வேறு பாதை உள்ளதா? என்பதையும் அறிய நீதியின் நலன் கருதி வழக்கறிஞர் ஆணையரை நியமிக்க வேண்டியது அவசியம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, மனு அனுமதிக்கப்படுகிறது. **திரு.வி.ஆகாஷ்**, வழக்கறிஞர் அவர்களை நீதிமன்ற ஆணையராக நியமித்து உத்திரவிடப்படுகிறது. இரு தரப்பினருக்கும் அறிவிப்பு கொடுத்த பிறகு மனு சொத்தை முழுமையாக ஆய்வு செய்து மனு சொத்திற்கு செல்ல உள்ள பாதைகள் குறித்தும் அதன் சுமாரான நீள அகலங்கள் குறித்தும் வரைபடத்துடன் கூடிய

அறிக்கையை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு நீதிமன்ற ஆணையருக்கு உத்திரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையரின் ஊதியமாக **ரூ.7500/-ஐ** மனுதாரர் நேரடியாக நீதிமன்ற ஆணையருக்கு தள ஆய்வின்போது செலுத்த வேண்டுமாய் உத்திரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் இவ்வுத்திரவின் ஆய்வுக்கான ஆணையை பெற்ற தினத்திலிருந்து 2 மாத காலத்திற்குள்ளோ அல்லது அதற்கு முன்பாகவோ தனது அறிக்கையை சமர்பிக்க வேண்டும் என்றும் தவறும் பட்சத்தில் ஆய்வுக்கான ஆணையை இந்நீதிமன்றம் திரும்ப பெற்று வேறு நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்படுவார் என்றும் உத்திரவிடப்படுகிறது.

நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்திற்காக **அழைக்க 04.08.2022**

(ஒம்/-) எஸ்.வடிவேல்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி.,
அவிநாசி.